# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு (மூ.மு) எண்: 0859/ஊராட்சி/2018

நாள்:10/7/2018

சி. எஸ். நடராஜன்,
27/18, பாரதியார் தெரு,
N.G.G.O. நகர்,
திருக்கோவிலூர் – 605 757. – **முறையீட்டு மனுதாரர்**

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருக்கோவிலூர் (ம) பலர். – **எதிர் மனுதாரர்**

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், திருக்கோவிலூரில் வசிக்கும் திரு. சி. எஸ். நடராஜன் அவர்களின் 2.7.18 நாளிட்ட புகார் மனுவில், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம் முதலூர் முன்னாள் கிராம ஊராட்சி தலைவர் திரு. த. கேசவன் மற்றும் முன்னாள் துணைத் தலைவர் திரு. க. ஆறுமுகம் ஆகியோர் கிராம ஊராட்சி தொகை ரூபாய்.6,36,108/– கையாடல் செய்துள்ளது தணிக்கையில் நிரூபிக்கப்பட்டு, கையாடல் பணத்தை திரும்ப வசூலிக்க (Recovery) நடவடிக்கை மேற்கொண்டிட வட்டார வளர்ச்சி அலுவலர், திருக்கோவிலூருக்கு உதவி இயக்குநர் தணிக்கை அவர்களின் ந.க.எண். இ1/1258/2011 நாள் 14.9.11 வழியாக ஆணையிடப்பட்டுள்ளது என்றும், கையாடல் தொகையை திரும்ப வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில் மென்மை தன்மையும், நெகிழ்வு தன்மையும் காணப்படுகிறது எனத் தெரிவித்து, மென்மை தன்மை போக்கினை கடை பிடித்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, கால அளவை நிர்ணயம் செய்து ஆணையிடக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

<u>பெறுநர்</u>
சி. எஸ். நடராஜன்,
27/18, பாரதியார் தெரு,
N.G.G.O. நகர்,
திருக்கோவிலூர் – 605 757.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விழுப்புரம் மாவட்டம்,
   விழுப்புரம். (இணைப்புகளுடன்)

2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்

3. ஊராட்சிப் பிரிவு உதவிப் பிரிவு அலுவலர்.